INDIAN JOURNAL OF TAMIL | Volume 2 | Issue 1

இந்திய தமிழ் ஆய்விதழ்

Check for updates

RESEARCH ARTICLE

# கிழக்கிலங்கை மருத்துவ ஓலைச்சுவடிகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ள மருத்துவத் தகவல் குறிப்புகள்: ஓர் ஆய்வு

**ஜீ. கென்னடி [அ], சி. ஓசாநிதி [அ, *]**

[அ] மொழிகள் துறை, கிழக்கு பல்கலைக்கழகம், இலங்கை.

# Medicinal Information Available in the Palm Leaf Manuscripts of the Eastern Sri Lanka – A Study

**J. Kennedy [a], S. Oshanithy [a, *]**

[a] Department of Languages, Eastern University, Sri Lanka.
*Corresponding Author Email: oshasivarasa12@gmail.com
(Received: 19th December 2020; Accepted: 02th Febuary 2021)
DOI: http://doi.org/10.34256/ijot2111

**Abstract:** The Palm leaf manuscripts are seen as documents that preserve the cultural heritage of the people. In that respect, palm leaf manuscripts have been maintained by the Eastern Tamil people for a long time. These palm leaf manuscripts can be classified into three types; literature, medicine and astrology. Literary palm leaf manuscripts include Ammanai, Drama etc. Palm leaf manuscripts related to astrology contain information such as Similarly, medical palm leaf manuscripts contain much medical information. It is noted that a medical palm leaf manuscript was discovered for in the East recently. This study is intended to introduce the structure, medical information and herbs of this palm leaf manuscript. This palm leaf manuscript has solutions for many ailments such as headaches, asthma, cough peenisam, pittam and rheumatism. There is also information on the preparation of sanjeevi legiyam. Neem, Milk, Honey Basil, etc. have been identified as having high Medicinal properties.

**Key Words:** Palm leaf manuscripts, Eastern Tamil peoples, Medical information, Medical palm leaf

## முன்னுரை

"நோய்களைப்போக்கி உடல் நலம்பேணும் கலையே மருத்துவம் அல்லது மருத்துவ அறிவியல்" (1884:2:1) என்று ஒக்ஸ்போட் ஆங்கில அகராதி மருத்துவம் அல்லது மருத்துவ அறிவியலை வரைவிலக்கணப்படுத்தியுள்ளது. உலகளாவியரீதியில் பொதுவாக மருத்துவம் அயற்பண்டுவம் என்னும் அலோபதி முறை, ஓரியல் பண்டுவம் என்னும் ஓமியோபதி, ஆயுர்வேதம், யுனானி, சித்த மருத்துவம் என்னும் ஐந்து வகைப்படும். பண்டைய கால மருத்துவத்தில் தாவரங்கள், விலங்கு உறுப்புக்கள், கனிமங்கள் முதலானவை அடங்கியிருந்தன. தற்பொழுது நவீன மருத்துவமானது பண்டைய காலத்தில் பயன்படுத்தப்பட்ட மருத்துவமுறைகளையோ அல்லது

அவற்றிக்கு மாற்றீடான மருத்துவ முறைகளையோ பின்பற்றி வளர்ச்சியடைந்துள்ளது.

அலோபதி எனப்படும் ஆங்கில மருத்துவமானது ஹிப்போகிரடிஸ் காலமான கி.மு 460இல் தொடங்கியதாகக் கருதப்பட்டாலும் தமிழில் குறிப்பாக இலங்கையில் 19ம் நூற்றாண்டின் இறுதியில்தான் தோற்றம் பெற்றது (Narenthiran, S., 2017). 19ம் நூற்றாண்டிற்கு முன்னர் குறிப்பாக 17ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இலங்கையில் நிலவிய மருத்துவமுறை பற்றி சே. சிவசண்முகராஜா தனது இருபதாம் நூற்றாண்டில் ஈழத்துச் சித்த மருத்துவம் (2000) எனும் நூலில் பின்வருமாறு கூறியுள்ளார் (Sivashanmugarajah, S., 2000).

இக்காலத்தில் நாட்டு வைத்தியம் சிறப்புற்றிருந்தது. நாட்டு வைத்தியர் எண்ணிக்கையில் குறைவில்லை. இவர்களுக்குச் சத்திரசிகிச்சை செய்வதில் பயிற்சியில்லை. நோய்பற்றித் தாம் பெற்றுள்ள அனுபவம், பயிற்சியைக்கொண்டே இவர்கள் நோய்களைக் குணப்படுத்துவர். இவ்வைத்தியம் தொடர்பாக இவர்களது முன்னோர்கள் இவர்கள் அனுபவங்களையும், ஆராய்ச்சிகளையும் எழுத்தில் பொறித்த ஏட்டுப்பிரதிகள் உண்டு. இவ்வைத்தியர்கள் நோய்களுக்கான சிகிச்சைகளாகக் குளிசைகளையும் (மாத்திரைகள்), திரவங்களையும் மருந்துகளாக வழங்குவது வழக்கம் இத்தகைய மருந்துகளை இவர்கள் பல்வேறு மூலிகைகளில் இருந்து தயாரிப்பர். காய்ச்சல், அதிக வயிற்றோட்டம் ஏற்படும்போது சிறிதளவு மிளகை அரைத்துத் தண்ணீர் சேர்த்துப் பொடியாக்கிப் பூசும்படி வைத்தியர் பணிப்பர்.

இவ்வாறான மருத்துவ முறையில் 17ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் தமிழ் மதப்பிரசாரத்திற்கு வந்த போல்டேயஸ் பாதிரியாரின் வயிற்றோட்டம் நீங்கப்பெற்றதாக அவரே குறிப்பிட்டிருப்பதாகவும் சே. சிவசண்முகராஜா தனது 'இருபதாம் நூற்றாண்டில் ஈழத்துச் சித்த மருத்துவம்' (2000) எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார் (Sivashanmugarajah, S., 2000).

எனவேதான் ஆங்கில மருத்துவம் தோன்றுவதற்கு முன்னர் இலங்கையில் தமிழ் மக்கள் மத்தியில் நிலவிய மருத்துவம் சுதேச மருத்துவ முறையான சித்தமருத்துவமாகும். இம்மருத்துவ முறையானது 19ம் நூற்றாண்டின் ஆரம்பம்வரை தமிழ் மக்கள் மத்தியில் இவர்களது முன்னோர்கள் ஏட்டுச்சுவடிகளில் எழுதி வைத்த வைத்தியக்குறிப்புக்களை அடிப்படையாகக் கொண்டு சித்த மருத்துவமுறை நிலவிவந்துள்ளது. இருப்பினும் 19ம் நூற்றாண்டின் இறுதியில் ஆங்கில மருத்துவத்தின் வருகையால் சித்த மருத்துவமுறை படிப்படியாக வளர்ச்சி குன்றத்தொடங்கியுள்ளது. தமிழ் மக்களால் பாதுகாக்கப்பட்டுவந்த ஏட்டுச்சுவடிகளின் பராமரிப்பும் குறைவடையத் தொடங்கியது. அவ்வாறானதொரு நிலையில் முன்னோர்களால் எழுதப்பட்டு சிதைவடைந்த நிலையில் காணப்பட்டு அண்மையில் கிழக்கிலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு ஏட்டுச்சுவடியை அடிப்படையாகக்கொண்டே இவ்வாய்வுக்கட்டுரை அமைந்துள்ளது. இம்மருத்துவச் சுவடியில் இயற்கை மூலிகைகளைப்பயன்படுத்தி மேற்கொள்ளக்கூடிய மருத்துவமுறைகள் இடம்பெற்றுள்ளதை இனங்காண முடிந்துள்ளது.

இவ்வாறு இவ்வேட்டுச்சுவடியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள சுதேச மருத்துவத் தகவல்கள் தற்பொழுதுள்ள நவீன மருத்துத்திற்கு அடிப்படையானதென்பதை அர்சத் அகமத்தின் (2019) கூற்றினூடாக அறிய முடிந்துள்ளது. 'இன்றைய நவீன மருத்துவமும் அடிப்படையில் ஆயர்வேத, யுனானி, சித்த, அக்குபஞ்சர், போன்ற மருத்துவமுறைகள் போலவும் அதே இயற்கை, மருந்துகளான இலைகள், மரச்சாறுகள், தேன் போன்றவற்றை அடிப்படையாகக்கொண்டவைதான். காலஓட்டத்தில் அது ஏனைய மருத்துவ முறைகளைவிட தேடல் மற்றும் ஆராய்ச்சியினால் முன்னணி பெற்றுள்ளது' (Arsath Akamath, M,P., 2019). எனக் குறிப்பிட்டுள்ளார். எனவேதான் தற்பொழுது நவீன மருத்துவமுறை (ஆங்கில மருத்துமுறை) வளர்ச்சியடைந்திருந்தாலும் தமிழ் மக்கள் மத்தியில்

ஏட்டுச்சுவடிகளில் காணப்படுகின்ற சுதேச மருத்துவத் தகவல்களையும் அடிப்படையாகக் கொண்டவை என்பது புலனாகின்றது. எனவேதான் அவ்வாறானதொரு கிழக்கிலங்கை தமிழ் மக்கள் மத்தியில் காணப்படுகின்ற மருத்துவ ஓலைச்சுவடிகளில் இடம்பெற்றுள்ள மருத்துவத் தகவல் குறிப்புக்களை வெளிப்படுத்துவதாகவே இவ் ஆய்வு அமைகிறது.

## இலக்கிய மீளாய்வு

பனை ஓலைகளின் இயற்பியல் பண்புகளை ஆய்வின்மூலம் கண்டுபிடித்து, பனை ஓலையானது நல்ல தரமான கையால் செய்யப்பட்ட காகிதத்தைவிட நான்கு மடங்கு வலிமையானது என்று சக்கரவர்த்தி குறிப்பிட்டுள்ளார் (Chakravarti, S., 1947). பனை ஓலைகளின் மாதிரிகளை ஆய்வு செய்து உடல் மற்றும் வேதியல் பண்புகள் குறித்தும் ஆயுளை நீடிக்கச் செய்யும் சிகிச்சை முறைகள் குறித்தும் சூர்யவன்ஷி, சின்ஹா மற்றும் அகர்வால் ஆராய்ந்து குறிப்பிட்டுள்ளனர் (Suryawanshi, et al. 1994). பனையோலைக் கையெழுத்துப்பிரதிகளில் உள்ள தகவல்களை விமர்சன நோக்கில் Sahoo, Jyotshna ஆராய்ந்து வெளிப்படுத்தியுள்ளனர் (Sahoo, Jyotshna, 2016). இவ்வாய்வின் நோக்கமானது பனையோலை கையெழுத்துப் பிரதிகளின் இலக்கியம் பற்றிய ஆய்வுகள், பனைஓலை கையெழுத்துப்பிரதிகளின் சிதைவுக்குக் காரணமான பௌதீக மற்றும் உயிரியல் காரணிகள், மேலும் பனையோலை கையெழுத்துப்பிரதிகளைப் பேணிப்பாதுகாக்கும் முறைகள் என்பவற்றை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

சே. சிவசண்முகராஜா தனக்குக் கிடைக்கப்பெற்ற ஏட்டுச்சுவடிகளை அடிப்படையாகக் கொண்டு இருமல், கண்நோய்கள், காது தொடர்பான நோய்கள் மற்றும் வாதம் போன்ற நோய்களுக்காகன சிகிச்சை முறைகளை 'சித்த மருத்துவ வாகடம்' (2008) என்னும் பதிப்பு நூலில் பதிப்பித்துள்ளார். அந்தவகையில் இவ்வாய்வானது கிழக்கிலங்கையில் உள்ள ஓலைச்சுவடிகளில் காணப்பட்டுள்ள மருத்துவத் தகவல்களை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது (Sivashanmugarajah, S., 2000).

## ஆய்வின் நோக்கம்

கிழக்கிலங்கை மக்கள் மத்தியில் காணப்படும் மருத்துவ ஓலைச்சுவடிகளை இனங்கண்டு, அவற்றில் காணப்படும் மருத்துவத் தகவல்களையும் தற்காலத்தில், அவை பெறும் முக்கியத்துவத்தையும், நோய்களுக்குப் பயன்படும் மூலிகைகள் மற்றும் அவற்றிக்குத் தேவையான பொருட்களையும், மேலும் இவ் ஓலைச்சுவடிகளை ஆவணப்படுத்துவதும் இதன் நோக்கமாக அமைகிறது.

## கருத்துரை

### மருத்துவ ஓலைச்சுவடிகளின் பௌதீக அமைப்பு

மருத்துவ ஓலைச்சுவடிகளுள் சிலவை ஏறத்தாழ 16cm நீளமும் 2.5cm அகலமும் கொண்டவையாகவும், சிலவை 37cm நீளமும் 3cm அகலமும் கொண்டவையாகவும், சிலவை 26cm நீளமும் 3cm அகலமும் கொண்டமைந்துள்ளன. இவ்வாறான நீள, அகலம் கொண்டதாக முப்பதிற்கும் மேற்பட்ட பனை ஓலைச் சுவடிகள் காணப்படுகின்றன. பொதுவாக ஓலைச்சுவடிகளில் பனையோலைகள் கிழிந்து விடும் என்பதற்காக ஒற்றெழுத்துக்கள் ஒற்றுப்பெறாமல் அமைந்திருக்கும். அவ்வாறானதொரு தன்மையை இவ்வோலைச் சுவடிகளிலும் காணக்ககூடியதாக உள்ளன. அத்தோடு 'ழ' கரம் வரவேண்டிய இடத்தில் 'ள' கரம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

'N', 'n' இவ்விரண்டு எழுத்துக்களும் பயன்படுத்த வேண்டிய இடங்களில் 'N' என்ற எழுத்தே

பயன்படுத்தப்பட்டுள்ளது. உதாரணமாக நெல்லி என்பதற்கு நேல்லி என எழுதப்பட்டுள்ளது. இதனை அவை வெளிப்படுத்தும் பொருள் அடிப்படையில் இனங்காண முடியும். மேலும் பேச்சு வழக்குச் சொற்பிரயோகங்கள் அதிகம் கையாளப்பட்டுள்ளன. உதாரணமாக சீலை (சேலை), மாதாளம் (மாதுளம்), காச்சி (காய்ச்சி), குழச்சி (குழைத்து), இலுமிச்சம் (எலுமிச்சம்) போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவ்வாறானதொரு ஓலைச்சுவடியை இங்கு படம் 1 இல் காணலாம்.




படம் 1. 'N' என்ற எழுத்தே பயன்படுத்தப்பட்ட ஓலைச்சுவடி

## இவ்மருத்துவ ஓலைச்சுவடியில் வெளிப்படுத்தப்பட்டுள்ள மருத்துவத் தகவல் குறிப்புகள்

இவ்மருத்துவ ஓலைச்சுவடியில் தலைவலி, வயிற்றுவலி, கண்வலி, பீனிசம், ஆஸ்துமா போன்ற நோய்களுக்குரிய தீர்வுகளும், சஞ்சீவி லேகியம், எண்ணெய் வகைகள் தாயாரித்தல் முதலான பல மருத்துவத் தகவல்களும் உள்ளடங்கியுள்ளது. அந்தவகையில் இந்நோய்களுக்கான தீர்வுகளையும் பயன்படுத்தும் மருந்துப் பொருட்களையும் நோக்குவோம்.

### தலைவலி, ஒற்றைத் தலை வலி, தலைநோய், தலைப்புண்

'இளநீர், ஆடுதின்னாப் பாலைச்சாறு, குப்பைமேனிச்சாறு, எலுமிச்சம்பழச்சாறு, காஞ்சோண்டிச்சாறு ஆகிய சாற்றினை எடுத்து அவற்றை சரி பாவாகக் காய்ச்சி சிறிது நேரத்தின் பின்னர் அவை குளம்பாக மாறும். அதன் பின்னர் அக்குளம்பைச் சாப்பிடுவதன் மூலம் ஒற்றைத் தலைவலி நீங்கும். அத்தோடு குப்பைமேனிச் சாற்றிலே குளவியால் மஞ்சலை அரைத்து துணியொன்றில் அவற்றையிட்டு வடிய விட்டபின்னர் அதனை எடுத்து தலையில் பூசினால் ஒற்றைத் தலைவலி நீங்கும். இதனை வெளிப்படுத்தியுள்ள பனையோலைப் பிரதியை இங்கு படம் 2 இல் காணலாம்.



படம் 2. தலை சம்பந்தமான நோய்களுக்கான ஓலைச்சுவடி


எலுமிச்சம், நல்லெண்ணெய், இருனாளி, தேங்காய்ப்பால், ஏலம், சீரகம், செங்களுநீர்

முதலானவற்றை அரைத்துக் காய்ச்சி பின்னர் அதை வடித்து தலையில் வைத்தால் தலைவலி மற்றும் நோய் நீங்கும். மேலும் மிளகு, சுக்கு, திப்பிலி, கீழ்காய் நெல்லி முதலியனவும் தலை தொடர்பான நோய்களுக்குப் பயன்படுகின்றன.

'செங்களு நீர், செவ்வெள்ளிக் கொடிச் சாதிக்காய், கராம்பு, குப்பமேனியிலை, செண்பகப்பூ, அதிமதுரம், சந்தணம், இவற்றை ஒன்றாகக் கலந்து மகிழம் வித்துச் சாற்றினை இட்டு நல்லெண்ணெய், வேம்பெண்ணெய், சேர்த்துக் காய்ச்சி மெழுகுப் பதத்தில் இறக்கி அதனை தலையில் பூசுவதால் தலையில் உள்ள நோய்கள் தீரும்'.

### சிறு பிள்ளை வயிற்று வலி, வயிற்றுக் கடுப்பு, வயிற்றுப் புண், சிரங்கு முதலிய நேய்கள்

'மாதுளம் பிஞ்சு கடுக்காய், நற்சீரகம், நெல்லிக்காய் என்பவற்றை ஒன்றாகச் சேர்த்து அரைத்து அதனை எருமைத்தயிரோடு கொடுத்தால் சிறுபிள்ளையின் வயிற்றுவலி, வயிற்றுக்கடுப்பு நீங்கி விடும்'.



படம் 3. வயிற்று சம்பந்தமான நோய்களுக்கான ஓலைச்சுவடி

'கராம்பு, அதிமதுரம், இதர பறங்கிக் கிழங்கு, பருத்தியிலைச்சாறு, முருங்கைக்காய்ச்சாறு, மொசு மொசுக்கையிலைச்சாறு, மாதுளம் பிஞ்சிலைச்சாறு, மொசுமொசுக்கைவேர், சிறுகுறிஞ்சாவேர், கண்டங்கத்தரி, செங்கத்தரிவேர், வேம்புப்பட்டை, நாவல்பட்டை, இழுவப்பட்டை, அத்திப்பட்டை இவற்றையெல்லாம் இடித்துப் பின்னர் அதை அவித்து அதன் பின்னர் அவற்றைக் காய்ச்சி நல்லெண்ணெய் விட்டு அதனைப் பாத்திரத்தில் இட்டு சில தினங்களுக்குப் பின்னர் அதை வடித்து தலையில் ஊற்றி தலைமுழுகும்போது வயிற்றுப் புண், சிரந்தி முதலிய நோய்கள் தீரும்'. இதனை முறையே பின்வரும் ஓலைச் சுவடி படம் 3 இல் வெளிப்படுத்தியுள்ளன.

### குழந்தைப் பிறப்பிற்கு, குழந்தை பிறந்த அல்லது கற்பிணிப் பெண்ணின் உடல் வலி முதலியவற்றைப் போக்குதல், குழந்தை பிறந்த பெண்ணின் நீர்ச்சாயல் நீங்குவதற்கு

'நொச்சி, மாவிலங்குவேர், உவர்வேர், எரிக்கிலைவேர், குப்பைமேனிவேர், முதலியவற்றைச் சரியாக எடுத்துச் சீவி, சுடுநீர் விட்டரைத்து வேப்பெண்ணெயில் கரைத்து அதனைக் கொப்பளிப்பதோடு, அதனைக் காய்ச்சி மெழுகுப் பதத்தில் வடித்துத் தலையில் இடுவதால் வாயு நீங்கி விடுவதாகவும் அவ்வாறு வாயு நீங்கி விடுவதால் குழந்தை பிறக்கும் என்றும்

ஓலைச்சுவடியில் குறிப்பிடப்பட்டுள்ளது'. மேலும் ஆடாதோடை, பனங்கள், சிறிய குறிஞ்சா, உவர் நொச்சி கண்டங் கத்தரி, நன்னாரி, களஞ்சி முதலியனவும் இதற்குப் பயன்படுத்தப்படுகிறது.

'நற்றைச்சூரிவேர், இழுவம்பட்டை, நாவல்பட்டை, ஒதியம்பட்டை, ஏழுமுள்ளுப்பட்டை, புல்லவாந்திப்பட்டை, அத்திப்பட்டை இவற்றையெல்லாம் எண்ணெய் வரும் வரை வறுத்து, பின்னர் அவற்றை இடித்து வேப்பெண்ணெய் விட்டு நன்றாக அரைத்து மேனியில் பூசி அதன் மேலே முருங்கையிலையைத் தீயில் வாட்டிப் போடுவதால் குழந்தை பிறக்கவிருக்கும் பெண்ணின் உடல்வலி குறையும்'.

'கருங்கிராந்தி, செங்கிராந்தி, களச்சியிலை ஒருபிடி, பருத்தியிலை ஒருபிடி, அத்திப்பட்டை, வட்டியிலை, முருங்கையிலை, செங்கீரை, பசுக்கோமயம், சிற்றாமணெக்கெண்ணெய், சாதிக்காய், மயிலட்டிக் குருத்து, நன்னாரிவேர், எலுமிச்சம்சாறு இவற்றிலெல்லாம் அளவுக்கேற்றபடி எடுத்து அவற்றை முலைப்பால், பசுப்பால், இளநீர், நல்லெண்ணெய் முதலியவற்றோடு கலந்து சில தினங்களுக்கு வைத்துவிட்டு பின்னர் அவற்றைக் காய்ச்சி மெழுகு பதத்தில் வடித்து அதனைப் பூசுவதால் குழந்தை பிறந்த அல்லது கற்பிணிப் பெண்ணின் பல உடல் வலி முதலியவை நீங்கும்'.

'வேப்பம் பட்டை மற்றும் இலையை அடுப்பில் ஊறப்போட்டு அதை வடித்து ஏழு நேரம் கொடுத்து வந்தால் நீர்ச்சாயல் நீங்கும்'.

### பூப்படைந்த பெண்ணிற்கு கொடுத்தல்

'மஞ்சள், அசமதாகம், மாதுளம்பட்டை, முதலியவற்றை இடித்துப் பிட்டாக அவித்து அவிந்த பின்னர் எருமைத்தயிர் இட்டு அரைத்து பூப்படைந்த பெண்ணிற்குக் கொடுப்பதால் வலி முதலியவை நீங்கும். அத்தோடு கோழிமுட்டை, நல்லெண்ணெய், எள்ளு, நெத்தலிக் கருவாடு முதலியன கொடுப்பதால் பூப்படைந்த பெண்ணிற்கு இழந்த சக்தி கிடைக்கும்'.

### வாத நோய் மற்றும் பித்தம் முதலிய நோய்கள்


'பெரிய குரும்பை, முருங்கை, தூதுவளைவேர், பெரிய உள்ளி, சுக்கு, அசமதாகம், கடுகு, திப்பிலி, சாதிக்காய், கராம்பு, கரியமிளகு, இவற்றையெல்லாம் ஒன்றாக்கி அவற்றை ஒரு பாத்திரத்தில் இட்டுக் காய்ச்சுவதால் வரும் எண்ணெய்யை வாதம் உள்ள இடத்தில் பூசுவதால் வாதம் நீங்கும்'. மேலும் நொச்சி, வேலிப்பருத்தி, திருக்கொன்றை, நல்லெண்ணெய், வேப்பெண்ணெய், கராம்பு, அதிமதுரம், கடுகு, நற்சீரகம், அசமதாகம், பசுப்பால் முதலியனவும் இந்நோய் குணமாவதற்குப் பயன்படுகின்றன.

கருஞ்சீரகம், சாம்பிராணி, வெந்தயம், வெண்குங்கிலியம், கரியபவளம், முதலியவற்றை நொச்சிச்சாறுவிட்டரைத்து அதனை ஏழுநாட்களுக்குப் பூசினால் வாதம் தீரும். நன்னாரி, வேலிப்பருத்தி, எரிக்கிலை, மாவிலங்கை, ஆடாதோடை, கடுகு, மிளகு, திப்பிலி, வசம்பு, உள்ளி, பெருங்காயம், நற்சீரகம் முதலியன பித்தம் தீர்வதற்குப் பயன்படுத்தப்படுகின்றன. மேலும் பாகையிலைச் சாற்றை இஞ்சியுடன் கலந்து உண்ணுவதால் பித்தம் தீரும்.

### கண்நோய் (கக்கட்டி, கண்ணெரிவு, கண் பார்வை தெளிவின்மை, வெள்ளெழுத்து முதலிய நோய்கள்)

தோடம்பழத்தோலைப்பொடி செய்து தேனில் குளைத்து கண்ணில் பூசுவதால் கண்நோய்கள் தீர்ந்துபோகும். மஞ்சளை அரைத்து, வெண்கராம்பு, புங்கம்வித்து முதலியவற்றுடன் தண்ணீர் சேர்த்து, நந்தியாவட்டைச்சாறு, எலுமிச்சம் பழச்சாறு, தேன் என்பவற்றைச் சேர்த்து அவற்றை அரைத்துக் குளம்பாக்கி கண்ணிலிட கண்ணெரிவு, கண் தெளிவின்மை முதலிய நோய்கள் தீரும். மிளகு, பொன்னாங்கண்ணிவேர், சிறுகீரைவேர், வெள்ளைக் காக்கணம்வேர், இவற்றை முலைப்பாலில் ஊறவிட்டு சில தினங்களின் பின்னர் எலுமிச்சம் பழச்சாறிட்டு அரைத்துக் கண்ணின் வெளியில் பூசுவதால் கண் நோய்கள் தீரும்.

கடுகு, திரிபலா, பேரீச்சம், வசம்பு, ஏலம், மிளகு, தேன் முதலியன வெள்ளெழுத்து நோயைத் தீர்ப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்றன. சுக்கு, திப்பிலி, நொச்சி, ஆடாதோடை முதலியனவும் கண் நோய்கள் தீர்வதற்குப் பயன்படுத்தப்படுகின்றன. கண்நோய்கள் தீர்வதற்குரிய ஓலைச் சுவடியை படம் 4 இல் இங்கு காணலாம்.




படம் 4. **கண்நோய்கள் தீர்வதற்குரிய ஓலைச் சுவடி**

## பீனிசம் முதலிய நோய்கள்

'சந்தணம், இலுப்பை, பச்சையரிசி, கராம்பு, கருஞ்சீரகம், திப்பிலி, செண்பகப்பூ, செங்காந்த மல்லிகை, கருஞ்சீரகம், உள்ளிச்சாறு, வெற்றிலைச்சாறு, கையாந்தயிலைச்சாறு, பசுப்பால், எலுமிச்சம்சாறு, மிளகு, மிளகு, உப்பு, சக்கரை இவற்றை நன்றாய் இடித்து இளநீரில் காய்ச்சி, சில மணி நேரத்தின் பின்னர் வடித்தெடுத்த சாற்றை நன்றாய்க் காய்ச்சி சந்தணம், மோர் இட்டுக் கலந்து நந்தியாவட்டைச்சாறும், முலைப்பாலுமிட்டு அரைத்துக் குளம்பாக்கி தலையில் பூசுவதால் பீனிசம் முதலிய நோய்கள் தீரும்'. மேலும் களஞ்சி, நல்லெண்ணெய் பசுப்பால் மற்றும் எலுமிச்சம் பழச்சாறு முதலியனவும் இதற்குப் பயன்படுகின்றன.

## ஆஸ்துமா மற்றும் இருமல் முதலிய நோய்கள்

'திப்பிலி, கருஞ்சீரகம், வசம்பு, உப்பு, அதிமதுரவேர், மிளகு, வெண்துளசி, தூதுவளைவேர், முசுமுசுக்கையிலை, என்பவற்றினைச் சம அளவு எடுத்து ஆடாதோடைச் சாற்றினையிட்டு அவற்றை அரைத்துத் தேனில் குழைத்து வயிற்றில் தடவினால் ஆஸ்துமா மற்றும் இருமல் நீங்கும்'.



படம் 5. **ஆஸ்துமா மற்றும் இருமல் நீங்குவதற்குரிய ஓலைச் சுவடி**

மேலும் மோர், சாதிக்காய், சுக்கு, பெருங்காயம், உள்ளி, வசம்பு முதலியனவும் ஆஸ்துமா முதலிய நோய்களுக்குப் பயன்படுகின்றன.

உள்ளி, சுக்கு, கடுக்காய், நெல்லி, அதிமதிரம், கடுஞ்சீரகம், அசமதாகம், திப்பிலி, பெருங்காயம் என்பவற்றை கற்பூரவள்ளிச்சாறு, மொசு மொசுக்கைச்சாறு இட்டு அரைத்து மெழுகு பதத்தில் (குழம்பாக) காய்ச்சி எருமை நெய்யிற் குழைத்து உண்ணுவதால் இருமல் முதலிய நோய்கள் தீரும்.

### சீதக் கழிச்சல் மற்றும் சிறுநீரக நோய்கள்

வில்வம் பிஞ்சை நன்றாக அரைத்து எருமைத் தயிரில் கலந்து உண்டால் சீதக் கழிச்சல் நீங்கும். மாதுளம்பட்டை, அவரைப்பட்டை முதலியனவும் இந்நோய் தீர்வதற்குப் பயன்படுத்தப்படுகின்றன.

'வெள்ளைச் சிங்கிலியிலை, திருக்கொன்றைத் துளிர், கையாந்தகரை, செங்கத்தரிவேர், நன்னாரி வேர், புங்கம்வேர், இயங்கம்வேர் மற்றும் துளிர், பொன்னாவரை, ஆமணக்கம் துளிர் முதலியவற்றை ஒன்றாக்கி சந்தணம், கருஞ் சீரகம், நற்சீரகம், அசமதாகம், திப்பிலி, உள்ளி, அதிமதுரம், மிளகு இவற்றையெல்லாம் பொடியாக்கி எரிக்கிலம் சாற்றில் கலந்து குடித்தால் சிறுநீரக நோய்கள் நீங்கும்'.

### பூனை கடித்தல் மற்றும் நஞ்சுப் பிராணிக் கடிக்கு

பூனை கடித்தால் முருங்கையிலையை அவித்துக் குடித்தல் மற்றும் மறுவிலி அரைத்து வெயிலில் காயவைத்து பூனை கடித்த இடத்தில் தடவுதல். நஞ்சுள்ள பிராணிகள் கடித்தால் அவற்றிக்குப் இலந்தம்பட்டை, மிளகு, சுண்ணாம்பு, வசம்பு, வேலிப்பருத்தி என்பன பயன்படுத்தப்படுகின்றன.

### ஏனைய நோய்களுக்கு

மூல நோய்களுக்கு அரிசி, முருங்கையிலை, ஆமணக்கெண்ணெய், நெல்லி, மிளகு, தூதுவளை என்பனவும், வீக்கத்திற்கு திரிகடுகு, சீரகம், நெல்லி, பெருங்காயம், எருக்கிலை என்பனவும் வயிற்றோட்டத்திற்கு நன்னாரி, எலுமிச்சை, சிறுகீரை, மஞ்சள், நெல்லி, வெள்ளைப்பூண்டு, ஆமணக்கெண்ணெய் முதலியனவும் சஞ்சீவி லேகியத்திற்கு ஏலம், கராம்பு, சுக்கு முதலியனவும் பயன்படுத்தப்படுகின்றன. சமிபாட்டுடன் தொடர்புடைய நோய்களுக்கு கண்டங்கத்தரி, வட்டுவேர், தூதுவளைவேர், ஆடாதோடைவேர், நன்னாரிவேர், திப்பிலி, நற்சீரகம், கருஞ்சீரகம், தேன் என்பன பயன்படுத்தப்படுகின்றன. மாதுளம் பழத்துடன் சக்கரை மற்றும் திப்பிலி சேர்த்தரைத்து தேனுடன் உண்டால் வாந்தி தீரும். பாவட்டை, நொச்சி, வேம்பு, ஆமணக்கு, மாதுளந்துளிர் முதலான இலைவகைகளை வறுத்துப் பின்னர் அதை அரைத்துக் கட்டினால் வீக்கம் வற்றும்.

## முடிவுரை

தற்பொழுது ஆங்கில மருத்துவம் பெருவளர்ச்சி அடைந்துள்ள நிலையில் ஓலைச்சுவடிகளில் எழுதப்பட்டுள்ள மருத்துவத் தகவல்கள் இனங்காணப்படாமல் அருகிய நிலையிலே காணப்படுகின்றன. மருத்துவ ஓலைச் சுவடிகளை ஆவணப்படுத்தும்போது எதிர் காலத்தில் தொற்றும், தொற்றா நோய்களுக்கான மருத்துவத் தகவல்களை கிடைக்கப்பெறும் என்பது ஐயமில்லை. மேலும் எம்மால் கிடைக்கக் கூடிய மூலிகைகளைக் கொண்டு சில மருந்துகளை உருவாக்குவதன்மூலம் சில நோய்களில் இருந்து எம்மால் விடுபடலாம். எலுமிச்சம், சிறுகீரை, மஞ்சள், நெல்லி, வெள்ளைப்பூண்டு, தயிர், இளநீர், பசுப்பால், சீரகம், கடுகு, மிளகு, முதலியவை எம்மால் ஓரளவு கிடைக்கக் கூடிய நிலையில் உள்ளன. இவ்வாறானவற்றை உணவில் சேர்த்தாலே ஓரளவு நோய்களைக் குறைக்கலாம்.

## References

Arsath Akamath, M, P., (2019). How Perfect is Modern Medicine?, *Vinavu*, March, 13. https://www.vinavu.com/2019/03/13/alternative-medicine-and-modern-medicine-dr-arshath-ahamed/

Chakravarti, S., (1947). A Study on Palm Leaf Manuscripts, *The Indian Archives*, I (4), 304-312.

Suryawanshi, D.G., Sinha P.M., Agrawal O.P., (1994). Basic Studies on the Properties of the Palm Leaf, *Restaurator,* 15(2), 65-78.

Sivashanmugarajah, S., (2000). *Irupatham Nootrandil Elzaththu Sidda Maruththuvam,* Bharathi Press, Jaffna.

Sahoo, Jyotshna, (2016). A Selective Review of Scholarly Communications on Palm Leaf Manuscripts, *Library Philosophy and Practice,*

Narenthiran, S., (2017) Medical Tamil Prose Trend, Keetru, https://www.keetru.com/index.php/2010-06-24-04-31-11/ungal-noolagam-mar17/32684-2017-03-16-14-47-51

**Funding:** NIL

**Acknowledgement:** NIL

**Conflict of Interest:** NIL

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License